www.tamilarangam.net

# அறிவகம் பக்கம் வரர்

ஐப்பசி 99

## எண்ணமும்.. செயலும்..

“ஒரு மனிதனின் பழக்க வழக்கங்கள் அவனை அறிந்து கொள்ள உதவும் நல்ல மனக்கண்ணாடி” என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். நல்ல எண்ணங்களிலிருந்து நல்ல பழக்கங்கள் ஏற்படுகின்றன. நல்ல பழக்கவழக்கங்களை வலுக்கட்டாயமாக அனுசரிப்பதன் மூலம் , நமது மன எண்ணங்களை மாற்றலாம் . சுத்தமான சலவை வேஷ்டியை அணிந்து செல்லும் போது மனதில் எழும் ஒரு புத்துணர்ச்சியை நினைத்துப் பாருங்கள்.

“முகத்தில் ஒரு புன்னகையைத் தவழவிடுங்கள். கொஞ்சம் கம்பீரமாக நின்று பாருங்கள். தலை நிமிர்ந்து நடவுங்கள். நடக்கும் வேகத்தைச் சிறிது அதிகப்படுத்திப் பாருங்கள். கூட்டங்களில் முன் வரிசையில் உட்கார்ந்து பழகுங்கள். பிறருடன் பேசும்போது குரலை உள்ளே விழுங்காமல் தெளிவாக நிதானமாகப் பேசிப்பாருங்கள். பிறருடன் பேசும்போது , கண்களைக் கண்ட இடத்திலும் பரவவிடாமல் பேசுபவரை நேரே நோக்கிக் கண்களைச் செலுத்துங்கள். தன்னம்பிக்கைக்கும் தைரியத் திற்கும் இதைவிட நல்ல மருந்து வேறில்லை.

நல்ல நண்பர்களுடன் பழகுவது நல்ல மனப்பழக்கங்களை ஏற்படுத்தும். சிறந்த அறிஞர்களுடன் பழகுவது நமது அறிவு நிலையை மன அளவில் உயர்த்தும். சிறந்த லட்சியவாதிகள் பேசக் கேட்பது நமது லட்சியங்களுக்கு ஒரு புதிய ஊக்கத்தை , உயிரைக் கொடுக்கும். மழை பெய்யும்போது ‘சனியன் பிடித்த மழை’ என்பதோ, வெயில் எரிக்கும்போது “பாழாய்ப் போன சூரியன்” என்பதோ நிலமையினை மாற்றுவதில்லை. இயற்கை நிலையை நம்மால் மாற்ற முடியாதபோது வீணாகக் குறைபட்டுக் கொள்வானேன். குறைபடுவது மேலும் சங்கடத்தை அதிகமாக்குமே தவிர குறைக்காது. ஆகவே சந்தோஷமான மனநிலையை ஏற்படுத்துவதன் மூலம் புறச்சூழ்நிலையின் கொடுமையைச் சற்றுக் குறைக்க முடியும். அதேபோல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நல்ல புத்தகங்களின் கருத்துக்களில் மனதைத் தினந்தோறும் ஈடுபடுத்துவது நல்ல பழக்கம் என்னும் விதைகளை விதைப்பதற்கு ஒப்பாகும். அழுகுரல் மனிதர்கள் நம் சக்தியை வடித்து விடுகிறார்கள். அவர்களுக்கு எதிராக நாம் நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும். நம்மை அறியாது நாம் ஏற்படுத்திவிட்ட சில மனப்பழக்கங்கள், கிடைப்பதை விட்டுவிட்டுக் கிடைக்காததை எண்ணிப் பொருமும் மனநிலை, காரியங்களை முடிக்காமல் பாதியில் விட்டுவிடும் அவநம்பிக்கையும், தாழ்வு மனப்பான்மையும், கையாலாகாத்தனமும், பிறர் என்ன சொல்வார்களோ என்று எதற்கும் அஞ்சும் பேதமை, சென்றதை எண்ணிக் குமையும் சீரழிவு, சிறிய விஷயங்களைப் பெரிதுபடுத்தும் சிலரது பொழுது போக்கு, எதிலும் குற்றம் கண்டுபிடித்து தம் வாழ்க்கையையும் பிறர் வாழ்க்கையையும் நரகமாக அடித்துக் கொள்ளும் சிலரது சிந்தனை ஓட்டம், தன்னைத்தானே எதற்கும் நொந்துகொண்டு, தன்னைத்தானே தாழ்த்திக் கொண்டு வாழும் ஜீவாத்மாக்களின் மனநிலை – இவை அனைத்தும் எண்ணமாய், நம்பிக்கையாய், பழக்கமாய்ப் போய்விடும் அபாயம் உண்டு. இவற்றை உணர்ந்து நாம் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும்.

இதற்கு மாறுபட்ட நல்ல மனோபாவங்கள் நமது வாழ்வில் மகிழ்ச்சி தரும்.

வாழ்வில் தொட்டாற்சுருங்கியாய் இல்லாமல் ஒரு சகிப்புத்தன்மையை வளர்ப்பது, காரியங்களைக் கண்டு பயந்து அஞ்சுவதற்குப் பதில், துணிந்து செய்யத் துவங்குவது, சோம்பேறித்தனமாய் காரியங்களை ஒத்திப் போடுவதற்குப் பதில், சிறிது சிறிதாக நுழைந்து வெற்றி காண்பது – இவை அனைத்தும் மனிதனின் மன நிலையிலிருந்து, மனிதன் குணநலனாக மாறுகின்றன. நல்ல பொழுது போக்குகளில் ஈடுபடுவது நமது ஆக்கசக்திகளை வெளிக் கொண்டுவர உதவும்.

நான் துடிப்பு நிறைந்த மனிதன், நீங்கள் முக்கியமானவர்கள் என்ற நினைவும் செயலும், நான் பிறருக்கும், என்னைச் சுற்றியிருக்கும் சமூகத்திற்கும் என்ன செய்ய முடியும் என்பவைதான் தத்துவங்கள். சிந்தித்துப் பார்க்க நிறைய இருக்கிறது அதில்.

# குறள் விளக்கம்

*"நகல்வல்லார் அல்லார்க்கு மாஇரு ஞாலம்*
*பகலும்பாற் பட்டன்று இருள்"*

புண்பட்ட நெஞ்சுக்குச் சிரிப்பைப் போல அருமையான மருந்து வேறு கிடையாது. உலக வாழ்க்கையிலிருக்கும் ஏற்றத்தாழ்வுகள்,இன்ப துன்பங்கள், பித்தலாட்டங்கள் ஆகியவற்றைப் பார்த்து, நாம் சிரிக்காமல்

www.tamilarangam.net

இருந்தோமானால், என்ன ஆகும் நம் கதி. பைத்தியம் உறுதியாகப் பிடித்து விடும். பைத்தியம் பிடிக்காமல் இருப்பதற்குச் சிரிப்பு என்னும் ஒரு சக்தி, நமக்கு ஆண்டவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிரிக்கத் தெரியாதவனுக்குப் பட்டப்பகலும் இருட்டாகத்தான் இருக்கும். தெளிவு இல்லாத காரணத்தால் சிரிப்பற்று இருக்கிறோம். பிறரோடு கலந்து பழகி, மகிழ முடியாதவர்க்கு மிகப் பெரிய இந்த உலகம், ஒளியுள்ள பகற்காலத்திலும் இருளில் கிடப்பதாம். விலங்கு இனங்களிலே சிரிக்கும் ஆற்றலைப் பெற்றவன், மனிதன் ஒருவன்தான். ஆனால் இந்த அரிய ஆற்றலை மனிதனுக்குப் பயன்படுத்தத் தெரியவில்லையே என்று ஆற்றாமைப்படுகிறார் வள்ளுவர்.

> தூய்மையற்ற செயலைப்போல், தூய்மையற்ற எண்ணமும் பெரும்பாலும் உடலைக் கெடுக்கும் சக்தி வாய்ந்தது என்பதை, தூய்மையான வாழ்க்கையை நாடுபவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.
>
> காந்திஜி

# உங்கள் சிந்தனைக்கு,

பிறரது செய்கை அல்லது பேச்சு தவறா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க, முதலில் நமக்கு மட்டும்தான் அது தவறாகப்படுகிறதா? அல்லது பொதுவாகத் தவறாகப்படுகிறதா? என்று யோசித்து அந்தக் காரணத்தை விலக்கிவிட வேண்டும்.

மனதைக் கூர்ந்து கவனித்து வந்தால் ஞானம் கைகூடும். ஆனால் அதற்கு இலட்சிய நோக்கு, பொறுமை கலந்த விடாமுயற்சி ஆகிய இரண்டும் வேண்டும். மனதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவதற்கே பல ஆண்டுகள் ஆகலாம். அதற்குப் பிறகுதான் வெற்றி கிட்டும்.

# கிறிஸ்தவ மதம்

கிறிஸ்தவ மதம் பரிசுத்த வேதாகமம் என்னும் வேத நூலை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது. பரிசுத்த வேதாகமம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பகுதிகளைக் கொண்டது. பழைய ஏற்பாடு இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு முன்பும், புதிய ஏற்பாடு இயேசுகிஸ்து பிறந்ததற்குப் பின்பும் உருவாக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டின் பெரும்பகுதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஹிப்ரூ மொழியிலும் சிறுபகுதி அராமய்க் மொழியிலும் உள்ளது. இயேசுகிறிஸ்துவின் தாய்மொழி அராமய்க் ஆகும். அராமய்க் மொழி நேரடியாக ஒன்றைச் சொல்வதில்லை. மறைமுகமாகவே சொல்லும். கிறிஸ்து தோன்றிய பொழுது அவருடைய இனம் மிகக் கீழான நிலையிலேயே இருந்தது. உலகிலேயே அதிகமான மொழிகளில் பிரசுரிக்கப் பட்ட புத்தகம் பரிசுத்த வேதாகமம் மட்டுமே. இது சட்டம், தீர்க்கதரிசிகள், புனிதக்கட்டுரைகள் என மூன்று பிரிவாக உள்ளது. இயேசு கிறிஸ்துவினால் சொல்லப்பட்ட புதிய ஏற்பாட்டில் அவருடைய வரலாறும், போதனைகளும், ஞானிகளின் புனித மொழிகளும் உண்டு. இது கி.பி 50ல் தொடங்கி கி.பி 900ல் முடிவடைந்தது என்பது ஆய்வாளரின் கருத்து. கர்த்தரைப் பற்றி முன்பே ஓர் நூல் உருவாக்கப்பட்டபடியால் இதற்கு புதிய ஏற்பாடு எனக் கூறப்பட்டது. இயேசுகிறிஸ்துவால் சொல்லப்பட்டது போல, மகனின் மூலம் அல்லாமல், யாரும் கடவுளைப் பார்த்ததில்லை. அது உண்மை. மகனில் தவிர கடவுளை நாம் எங்கு காண முடியும்? நீங்களும், நானும், நம்மைவிட ஏழையும் அந்தக் கடவுளை நம்மில் கொண்டுள்ளோம். பரலோக அரசு உங்களுக்குள் இருக்கிறது என்றார். மேலும் நானும், என் தந்தையும் ஒன்று என்றார். இங்கிருந்து சூரியனை நோக்கி ஒரு நேர்கோட்டில் பிரயாணம் செய்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இங்கிருந்து பார்க்கும் போது சூரியன் சிறியதாகத் தெரிகிறது. பத்து இலட்சம் மைல் தூரம் போனதும் பெரியதாகத் தோன்றும். இன்னும் மேலே போகப்போக சூரியன் பெரிதாகிக் கொண்டே வரும். அதே சூரியனை ஒவ்வோர் இடத்திலிருந்தும் படம் பிடிக்க இருபதினாயிரம் புகைப்படங்கள் கிடைக்கின்றன. என்று வைத்துக் கொள்வோம். இந்த இருபதினாயிரம் படங்களும் ஒன்றுக்கொன்று வேறுபடும். அதற்காக ஒவ்வொன்றும் அந்த சூரியனின் படம் இல்லையென்று சொல்ல முடியுமா? இதே போலத்தான் எல்லா சமயங்களும் இறைவனை உணரும் பல நிலைகளே.

கல்லாத மனிதனின் வளர்ச்சியுறாத அறிவு, கடவுள் எங்கோ தூரத்தில்(வானத்தில்) ஒரு சிம்மாசனத்தில் உட்கார்ந்து கொண்டு நமக்கெல்லாம் தீர்ப்பளிப்பது போல காண்கிறது. இதற்கான பிரார்த்தனையைப் பாருங்கள். பரமண்டலத்தில் இருக்கும் எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. என்பது படிக்காத மக்களுக்காக என்பதைக் கவனியுங்கள். இன்னும் சற்று முன்னேறியவர்களுக்கு, அவர் நான் என் பிதாவில் இருக்கிறேன், நீ என்னில் இருக்கிறாய், நான் உன்னுள் இருக்கிறேன் என்று போதித்தார். அவர் யார் என்று யூதர்கள் கேட்டபோது தாமும் தந்தையும் ஒன்று என்று கூறினார். இதை தெய்வ நிந்தனை என்றார்கள். இதை என்ன கருத்தில் சொன்னார்? பழைய தீர்க்கதரிசிகளும் இதையே சொன்னார்கள். முத்தியடைய பரிசுத்தமே வேண்டுமென்றார். மனத்தூய்மையுள்ளவர்களே பாக்கியவான்கள். ஏனெனில் ஆன்மாவின் இயல்பே பரிசுத்தம்தான். புதிய ஏற்பாட்டில் அது கடவுளின் மூச்சு எனப்படுகிறது. ஆன்மாவானது தீய செயல்களினால் மூடப்பட்டுள்ளது. ஆன்மாவைச் சுத்தமாக்க ஒருவழி

www.tamilarangam.net

துறவு மட்டுமே. ஏனெனில் ஒருவன் இயேசுவிடம், நித்திய ஜீவனை அடைய எந்த நன்மையைச் செய்யவேண்டும் எனக் கேட்டான். அதற்கு அவர் உன்னிடத்தில் உள்ளவற்றை ஏழைகளுக்கு கொடுத்து விட்டு பிறகு சிலுவையை எடுத்துக்கொண்டு என் பின்னால் வா என்றார். அவன் அதைக் கேட்டு துக்கமடைந்தான். நாமும் இதேபோல்தான். எவன் இந்த வாழ்க்கையை இறைவனுக்காக இழக்கிறானோ அவன் அமரத்துவ வாழ்வை அடைவான். உலகின் எல்லா சமயங்களும் இதையே போதிக்கிறது.

இறைவனை அறிவதே எமது நோக்கம்.(*யோவான் 17–3).* அவர் உங்களுக்குள்ளேயே இருக்கிறார்.(*யோவான் 14–17).* ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்.(*யோவான் 8–58)* இதன் கருத்து ஆன்மா அழிவில்லை என்பதே. நன்மை செய்தவர்கள் இறைவனுடன் கலப்பார்கள். தீமை செய்தவர் மீண்டும் பிறப்பர். (*யோவான் 5–29).* வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். (*யோவான் 5–39).* எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பேசினால் அது இம்மையிலும், மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை. (*மத்தேயு 12–32).*இதன் கருத்து மறுபிறப்பு உண்டு என்பதாகும். நம்முடைய அறிவு குறைவானது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.(*1 கொரிந்தியர் 13– 9,10)* வாழ்க்கை என்பது மாயையே.(*பிரசங்கி 11–8, 12–8)* ஜீவன் கொஞ்சக் காலம் தோன்றி பின் தோன்றாமல் இருக்கும். (*யாக்கோபு 4–14)* மிருகத்தைவிட மனுஷன் மேலானவன் அல்ல.(*பிரசங்கி 3–19,20)* எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவையே.(*எசேக்கியேல்18–4)* தேவன் நமக்கு தெளிந்த புத்தியுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார். (*11 தீமோத்தேயு 1–7*) ஆனபடியால் அந்த புத்தியைப் பயன்படுத்தி இறைவன் எங்கே என்பதைத் தேடுவோம். தேடுங்கள் கிடைக்குமென்றார். தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. என்று 1 யோவான் 4–12 ல் கூறப்பட்டிருக்கிறது. ஆனபடியால் இனிமேலாவது மூடக்கொள்கைகளை விடுத்து தேவனைத் தேடுவோம்.

# உலகநீதி

எப்பொழுதும் உண்மையே பேசவேண்டும். ஒருநாளும் மனமறியப் பொய்பேசக் கூடாது. நிலையான செயலைச் செய்யவேண்டும். நிலையில்லாக் காரியத்தைச் செய்யக் கூடாது. நல்ல குணம் கொண்டவர்களோடு பழகவேண்டும். கொடிய குணம் கொண்டவர்களோடு பழகக்கூடாது. தீயகுணம் கொண்டவர்களோடு பழகுவது பாம்போடு பழகுவதற்கு ஒப்பாகும். எவ்வளவு அன்போடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பழகினாலும் பாம்பு விஷப்பல்லால் கடித்துவிடும். அது போல நாம் நல்ல இயல்போடு பழகினாலும் தீயகுணம் கொண்டவர் நமக்குக் கெடுதலையே செய்வர். நல்ல பண்பும், பழக்கமும் உடையவர்களுடைய பேச்சையே கேட்க வேண்டும். பண்பற்ற வர்களோடு நட்புக் கொள்ளக் கூடாது.

# பிராம்மணன்

இந்துக்கள் அடிப்படையில் நான்கு வருணன்களாகப் பிரிக்கப்பட்டார்கள். பிராம்மணர்கள், சத்திரியர்கள்,வைஸ்யர்கள், சூத்திரர்கள். இதைவிட ஐந்தாவதாக பஞ்சமர்கள்.

பிராம்மணர்களின் பிறப்பே தர்மத்தின் பிறப்பாகும். ஏனெனில் பிராம்மணன் மனித இனத்திடம் மகிழ்ச்சியைஏற்படுத்தஅவதரித்தவன்.பிராம்மணன் உலகமாந்தரில் உயர்ந்தவனாகப் படைக்கப்பட்டவன். மதக்கடமைகள், சமூகக் கடமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கவே அவதரித்தவன். சில சாஸ்திரங்கள் கடவுளிலும் உயர்ந்தவனாக சித்தரிக்கின்றது. பிராம்மணனே கடவுள் என்றும் சில சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. பிராம்மணன் இப்படி உயர்த்திப் பேசப்பட்டதற்கு ஒரு சமூகத்தேவை இருந்தது. பிராம்மணன் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற கடுமையான நியமனங்களும் இருந்தது. சமூகசேவை செய்வதையே தனது வாழ்க்கை லட்சியமாக கொள்ள வேண்டும். எளிமையான வாழ்க்கையே அவன் வாழ வேண்டும். பிராம்மணனின் வாழ்க்கை நான்கு நிலைகளில் வரையறுக்கப்பட்டன.

பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்.

பிரம்மச்சரிய நிலையில் குருகுல வாசம் செய்து வேதங்களைப் பயில்கிறான். குருவுக்குப் பணிவிடைகள் செய்கிறான். உபநயனம் செய்யப்பட்ட பின் பிரமச்சரிய வாழ்க்கை ஆரம்பமாகிறது. வேதங்களைப் பயின்று முடிகின்றவரை அது நீடிக்கிறது. குருகுலவாசம் முடிந்த பின் குருதட்சணை செலுத்தி, தன் பெற்றோரிடம் திரும்புகிறான்.

பின் கிரகஸ்த தர்மத்தை அவன் ஆரம்பிக்கிறான். கன்னி கழியாத பெண்ணையே திருமணம் செய்து கொள்ளுகிறான். அவளோடு அவன் இல்லறம் நடத்தினாலும், அவளிடமே அதிகப் பொழுதைக் கழித்து விடக்கூடாது. இன்பத்துக்காக அவளுடன் உடலுறவு வைத்துக் கொள்ளக் கூடாது. குழந்தைப் பேற்றுக்காக மட்டுமே உறவு கொள்ள வேண்டும். கிரக தர்மத்தில் உள்ளவன் சிரார்த்தங்களை முறையாகச் செய்ய வேண்டும். அப்போது மனதை மிகுந்த தூய்மையுடன் வைத்துக்

www.tamilarangam.net

கொள்ள வேண்டும். கிரகஸ்தன் குழந்தைகளைப் பெறும்போது பிதுர்க்கான முக்கிய கடமையினை நிறைவேற்றியவனாவான். குழந்தைகளுக்கு வயது வந்து, விபரம் தெரிந்தவுடன் வானப்பிரஸ்த நிலைக்குத் தயாராக வேண்டும்.

வானப்பிரஸ்த நிலை, கட்டுப்பாடுகள் நிரம்பிய வாழ்க்கை. அந்த நிலையில் அவன் ஆடம்பர உடைகளை அணியக்கூடாது. இடுப்பில் துண்டு கட்டிக்கொண்டால் போதும். முடியை கத்தரிப்பதைவிடுத்து இயற்கையாகவே வளர விடவேண்டும். யாசித்த உணவையே உண்ண வேண்டும். வேதங்களைச் சொல்லி, ஞானத்தில் ஆழ்ந்து, இறைவனுடைய திருவடிகளையே எப்போதும் எண்ணியபடி இருக்க வேண்டும்.

வானப்பிரஸ்தநிலை முடியும் தருணத்தில் சந்நியாச நிலைக்கு அவன் தயாராகிறான். ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவையே அவன் புசிக்க வேண்டும். எந்தவொரு இடத்திலும் தங்கிவிடாமல் தேசாந்திரியாக அவன் திரிந்து கொண்டேயிருப்பான். உடல் நலத்தில் கொஞ்சமும் அக்கறையின்றி ஆன்ம விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அவன் செயல்பட்டுக் கொண்டிருப்பான். இந்த நான்கு நிலைகளும் லட்சியமான வாழ்க்கை நிலைகள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவையெல்லாம் நடைமுறைக்கு எளிமையானவையல்ல. ஆகவே காலப்போக்கில், இந்தக் கடமைகளை மறந்து சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட சலுகைகளை மட்டும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்கள். இப்போ இந்த நான்கு நிலைகளையும் திருமணத்தின்போது மற்றவர்களுக்கு சொல்கின்றனர்.

சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட நியமங்களை அவர்கள் அனுஷ்டிக்காவிட்டாலும் பரம்பரை பரம்பரையாக தாங்கள் பெற்று வந்துள்ள பெருமைகளையும், வசதிகளையும் பாதுகாத்துக் கொள்ளுவதில் கண்ணும் கருத்துமாகவே இருக்கிறார்கள்.

# வடிகட்டிய மடமை

ஒரு நாட்டுப் பெண் வீட்டுக்கு வருகின்ற அதே ஆண்டில் மாமியார் காலமானதைக் கண்டு, “இந்தச் சனியன் வந்து மாமியாரை விழுங்கிவிட்டாள்.”என்று சிலர் கூறுகிறார்கள்.

ரயில் ஏறும்போதே இறங்கும் ஸ்டேஷனை நிச்சயப்படுத்தி டிக்கட் வாங்கிவிடுவதைப் போல் ஓர் உயிருக்குப் பிறப்பதற்கு முன்னே இறப்பு நிச்சயமாகிவிடுகிறது.

ஆதலால் மருமகள் வருவதற்கும் மாமியார் மாள்வதற்கும் சம்பந்தமே கிடையாது. மருமகள் மாமியாரை விழுங்கிவிட்டாள் என்று கூறுவது வடிகட்டிய மடமையாகும்.

www.tamilarangam.net

நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு நம் வினை காரணமேயன்றி மற்றவர்கள் அல்ல. ஆனபடியால் எவரையும் நோவாதே.

# மக்கள் சேவை

ஆசையின்றி பயன் கருதாமல் மக்களுக்குச் சேவை செய்தால் புகழ் தானே வரும். புகழுக்கு ஆசைப்படக்கூடாது. மலரை நாடி வண்டுகள் வருவதுபோல் பற்றற்ற சேவையால் புகழ் தானே வரும்.

# அறிவு

மனிதனை உயர்த்துவது பணமன்று. பதவியன்று. குலமன்று. பருமனன்று. உயரமன்று.
அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்தும்.
"**அறிவுடையார் எல்லாம் உடையார்**" என்கிறார் திருவள்ளுவர்.

## வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்

**ஆயினும் எமக்கு வாசிப்பதற்குரிய சந்தர்ப்பங்கள் குறைவு. கிடைக்கும் சந்தர்ப்பங்களிலும் பெரிய பெரிய புத்தகங்களைப் படிப்பதற்குரிய மனப்பக்குவமும் பொறுமையும் வாய்ப்பதில்லை. இச் சந்தர்ப்பத்தில் அவ்வப்போது படித்த, எல்லோருக்கும் பயன்படக்கூடியன என்று கருதும் விடயங்கள் சில இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.**

*நீங்கள் படிப்பவைகளுள்ளும் பிறருக்குப் பயன்படும் எனக் கருதுபவைகளை அறிவோர் பக்கத்திற்குச் சேர்ப்பியுங்கள்.*

தொடர்புகளுக்கு : *Varatharajah, 6,R. champs de la ville, 45500 Gien, FRANCE*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்